# விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட அரசு தமிழ்நாடு அரசு: மானிய விலையில் பொருட்கள் வழங்கி அமைச்சர் கீதா ஜீவன் பெருமிதம்



**கோவில்பட்டி ஜூலை 31**

கோவில்பட்டி யூனியன் அலுவலகத்தில் விவசாய மக்களுக்கு இடுபொருள் மற்றும் கருவிகள் வழங்கும் விழா நடந்தது.அமைச்சர் கீதா ஜீவன் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு ஏராளமான நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

அப்போது அவர் கூறியதாவது. விவசாயிகளுடைய மண் பரிசோதனை ஆய்வு செய்து என்ன மாதிரி சத்துக்கள் இருக்குது, அமிலத்த ன்மையால் நன்மையா என ஆய்வு செய்து என்ன மாதிரி பொருட்கள் விளைவிக்க வேண்டும் என்றெல்லாம் உழவர்களுக்கு ஒரு ஆலோசனை வழங்குவதற்காக எல்லா பரிசோதனை மண் அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இப்பொழுது நம்முடைய முதலமைச்சர் ஒரு நடமாடும் மண் பரிசோதனை வாகனம் தொடங்கியுள்ளார்.

இது முதற்கட்டமாக நமது கோவில்பட்டி ஒன்றியத்தில் நம்முடைய முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார். இடுபொருள் மானியம் நம்முடைய கூட்டுறவு வங்கியில் உடனடியாக உறுப்பினர் ஆன உடனே கடன் பெறுவது பயிர் கடன் தள்ளுபடி செய்துள்ளார். ஒன்றிய அரசு கடன் கொடுப்பதற்கும் சிபில் ஸ்கோர் பாக்குறாங்க. ஆனா கூட்டுறவு வங்கியில் வாங்க விவசாயிகளுக்கு எல்லாம் சிபில் ஸ்கோர் பார்க்க கூடாது என்ற உத்தரவே முதலமைச்சர் அறிவித்துள்ளார். இவ்வாறு பல்வேறு திட்டங்களை விவசாயத்துக்கு என தனி ஒரு பட்ஜெட் என்றெல்லாம் விவசாயங்கள் மானிய விலையில் வழங்குதல் என்று எல்லா திட்டங்களையும் முறையாக விவசாயிகள் சென்றடையும் வண்ணம் முதலமைச்சர் எல்லா திட்டங்களையும் செய்து வருகிறார். இன்றைய தினத்தில் கடலைமிட்டாய் குறுங்குழும்பம் சார்பில் உற்பத்தி கடலைமிட்டாய் செய்ய அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. சிறு மற்றும் குறு தொழில் நிறுவனம் சார்பில் சட்ட சபையில் முதல்வர் அறிவித்த ஒரு வாக்குறுதி இந்த கடலைமிட்டாய் 7 கோடி 31 லட்சத்துக்கு அந்த திட்டம் தயாரிக்கப்பட்டு

உற்பத்தியாளர்கள் மூலதனமும் பெறப்பட்டு நவீன முறையில் மூலப்பொருள்கள் சுத்தப்படுத்தப்பட்டு பேக்கிங் செய்து வெளிநாடுகளுக்கு சந்தைப் படுத்தப்பட உள்ளது. இதக கோவில்பட்டிக்கு மட்டுமல்ல மாநிலத்துக்கு ஒரு மிகப்பெரிய வெற்றி. புவிசார் குறியீடு பெற்ற கடலை மிட்டாய்க்கு இனி உலக அளவில் வரவேற்பு இருக்கும். இவ்வாறு பேசினார். நிகழ்ச்சியில் கோவில்பட்டி நகர் மன்ற தலைவர் கா. கருணாநிதி, ஒன்றிய செயலாளர் பிக்கிலிபட்டி முருகேசன், ராதாகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் கோவில்பட்டி கோட்டாட்சியர் தாசில்தார் கோவில்பட்டி கோவில்பட்டி சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்க தலைவர் அரிமா பரமசிவம். கே என் ஆர். கடலை மிட்டாய் கம்பெனி அதிபர் கண்ணன், உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்டத்தில்

# பல்வேறு அரசு துறைகளின் கீழ் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த ஆய்வுக் கூட்டம்

## சட்டமன்றப் பேரவை உறுதிமொழிக் குழு தலைவர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது




தென்காசி ஜூலை.31

தென்காசி மாவட்டம் பல்வேறு அரசு துறைகளின் கீழ் வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுதிமொழிக் குழு தலைவர் / சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தென்காசி மாவட்டத்தில் பல்வேறு அரசு துறைகளின் கீழ் வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2024-2026-ஆம் ஆண்டிற்கான உறுதிமொழிக் குழு தலைவர் / சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் தலைமையில், கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், முதன்மை செயலாளர் முனைவர் சீனிவாசன், சட்டமன்ற உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் அருள் (சேலம் மேற்கு), தளபதி (மதுரை வடக்கு), நல்லதம்பி (திருப்பத்தூர்), மாங்குடி (காரைக்குடி), எம்.கே.மோகன் (அண்ணாநகர்), ஜெயக்குமார் (பெருந்துறை) மற்றும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார் , வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.சதன்திருமலைக்குமார் ஆகியோர் முன்னிலையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுதிமொழிக் குழு தலைவர் / சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் தெரிவித்ததாவது :-

சட்டமன்ற பேரவையில் தமிழ்நாடு முதலமைச்சர் , அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் அறிவிக்கும் திட்டங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பும் வினாக்கள் அதனடிப்படையில் அறிவிக்கப்படும் திட்டப்பணிகள் ஆகியவை உறுதிமொழியாக கருதப்படுகிறது. இந்த உறுதிமொழிகளை முழுமையாக நிறைவேற்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதில் அந்தந்த துறை சார்ந்த அலுவலர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். அந்தவகையில் தென்காசி மாவட்டத்தில் அறிவிக்கப்பட்டு நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுதிமொழி அளிக்கப்பட்டு இன்று ஆய்வுக்கு எடுக்கப்பட்ட உறுதிமொழிகளின் எண்ணிக்கை 117 ஆகும். இந்த ஆய்வில் 13 உறுதிமொழிகள் படித்து பதிவு செய்யப்பட்டவையாகும். மேலும், 26 உறுதிமொழிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. இதில் 78 உறுதிமொழிகள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன.

நடப்பு சட்டமன்றப் பேரவையில் எடுத்துக்கொள்ளப்பட்ட 77 உறுதிமொழிகளில் 24 உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 7உறுதிமொழிகள் படித்து பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 46உறுதிமொழிகள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன.மேலும், நிலுவையிலுள்ள உறுதிமொழிகளை விரைந்து முடித்திட துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தென்காசிமாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாக சென்று அரசு துறைகளின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக, தென்காசி நகரில் அமைந்துள்ள அருள்மிகு காசிவிஸ்வநாத சுவாமி திருக்கோவிலில் நடைபெற்ற திருப்பணி மற்றும் கும்பாபிஷேகம் குறித்து பார்வையிட்டும், புதிய பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகள் மற்றும் அறிவுசார் மையத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், புதிய மாவட்ட மருந்து கிடங்கு அமைப்பது குறித்தும், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.6.90 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த அவசரக்கால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு மையத்தினையும், அடவி நயினார் அணையினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, புளியரை காவல்நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து மக்களின்பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இணைச் செயலாளர் கருணாநிதி, சார்பு செயலாளர் பியூலஜா,மாவட்டவன அலுவலர் அகில்தம்பி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை, கட்டிடம் மற்றும் பராமரிப்பு) அனிட்டா சாந்தி, இணை இயக்குநர் (நலப்பணிகள்) மருத்துவர். பிரேமலதா, தென்காசி வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா, மற்றும் அனைத்து துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்டத்தில்

# நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் தொடர்பான கூட்டம்: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது

**தென்காசி ஜூலை.31:**

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் தொடர்பாக அனைத்து துறை அலுவலர்கள் கூட்டம் கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் 28.07.2025 அன்று நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் தொடர்பாக அனைத்து துறை அலுவலர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது

பின்னர்கலெக்டர் ஏ. கே.கமல்கிஷோர், தெரிவித்ததாவது,

வருகின்ற 02.08.2025 சனிக்கிழமை அன்று தமிழ்நாடு முதலமைச்சரால் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் சென்னையில் வைத்து துவங்கப்பட உள்ளது.அதன் அடிப்படையில் நமது மாவட்டத்தில் அன்றைய தினம் மேலநீலிதநல்லூர் வட்டாரம், சேர்ந்தமரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் வைத்து முகாம் துவங்கப்பட உள்ளது.

மேலும், இந்த முகாம்களில் பொது மருத்துவம், பொது அறுவைச் சிகிச்சை, எலும்பியல், மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் நலம், இருதயவியல், நரம்பியல் உட்பட 17 துறைகளின் சிறப்பு சிகிச்சை மருத்துவர்களால் முகாம் மேற்கொள்ளப்படுகிறது எனவும், மேலும் முதலமைச்சர் காப்பீடு திட்டத்தின் கீழ் அடையாளஅட்டை, மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகளும் இம்முகாம்களில் வழங்கப்படுகிறது.

மேலும், மாவட்டத்தில் உள்ள 10 வட்டாரங்களில் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற இருக்கின்ற முகாம்களுக்கு உள்ளாட்சி துறை, காவல்துறை, பொதுப்பணித் துறை, தொழிலாளர் நலவாரியத்துறை, பள்ளி கல்லூரி நிர்வாகம், மின்வாரியத் துறை, மகளிர் திட்டம், சமூக நலம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், வருவாய் துறை உணவு பாதுகாப்பு துறை மற்றும் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் உட்பட அனைத்து துறைகளும் வேண்டிய ஒத்துழைப்பு மற்றும் முன்னேற்பாடுகளை சுகாதாரத் துறையுடன் இணைந்து பணியினை மேற்கொள்ள வேண்டும்.

இக்கூட்டத்தில்அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## செங்கோட்டை நகர பாஜக சார்பில்

# எடப்பாடி பழனிச்சாமி வருகையையொட்டி வரவேற்பு பதாகைகள்: எம்.எல்.ஏ.கிருஷ்ணமுரளி(எ)குட்டியப்பா வெளியிட்டார்

**செங்கோட்டை, ஜூலை, 31,**

செங்கோட்டையில் தென்காசி வடக்குமாவட்ட அதிமுக அலுவலகத்தில் வைத்து மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற தலைப்பில் தமிழ்நாடு எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமி எழுச்சி பயணம் வரும் ஆகஸ்ட் மாதம் 5, 6,ஆம் தேதிகளில் தென்காசி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டங்களில் நடைபெற உள்ள நிலையில் செங்கோட்டைநகர பாரதீய ஜனதா கட்சியின் சார்பில் எடப்பாடி பழனிச்சாமியின் வருகையை வரவேற்கும் விதமாக வரவேற்பு பதாகை அட்டை வெளியிடும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியில் தென்காசி வடக்குமாவட்ட அதிமுக செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான கிருஷ்ண முரளி (எ)குட்டியப்பா தலைமைதாங்கி வரவேற்பு பதாகைகளை வெளியிட்டு சிறப்பித்தார். நிகழ்ச்சியில் பாஜக நகரத்தலைவர் முத்துமாரி, முன்னாள்.மாவட்ட தலைவர் விளையாட்டு மேம்பாட்டு பிரிவு பொன்னுலிங்கம் (எ)சுதன், பிஎல்எம்.ஸ்போரட்ஸ் அகாடமி நிறுவனத்தலைவர் எல்.எம்.முரளி, பாஜக நகரச் செயலாளர்கள் ஜமீன்முத்துக்குமார், லெட்சுமணன், விளையாட்டுப் பிரிவு முன்னாள் .நகர துணை தலைவர் வீரக்குமார், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# சாம்பவர்வடகரை பேரூராட்சி மன்ற தலைவர் சீதாலெட்சுமி முத்து தலைமையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

## தென்காசி மாவட்ட திமுக பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்பு



**தென்காசி ஜூலை31 :**

சாம்பவர்வடகரை பேரூராட்சிக்குட்பட்ட 1 முதல் 7 வார்டுகளுக்கு "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் சாம்பவர் வடகரை தில்லைவனத்தான்கரை ஸ்ரீ அம்பிகை சமுதாய நலக்கூடத்தில் வைத்து நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி சாம்பவர் வடகரை பேரூராட்சி மன்றத் தலைவர் சீதாலெட்சுமி முத்து தலைமையில், பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் நாலாயிரம் பாப்பா, சாம்பவர்வடகரை பேரூர் திமுக செயலாளர் முத்து (எ) செல்லக்கனி முன்னிலையில் சிறப்பு அழைப்பாளராக தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் வே.ஜெயபாலன் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி, துவக்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், செயல் அலுவலர் விமலா ஸ்டல்லா பாய், பேரூராட்சி கவுன்சிலர்கள் சுடலைமுத்து, பழனி குமார், ரஃபிக் ராஜா, மெர்சி சுந்தர், விஜயலட்சுமி, ஐயப்பன், இசக்கி, தேவி உள்ளிட்டோர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், திமுக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உட்பட ஏராளமானார் கலந்து கொண்டனர் மேலும், சாம்பவர்வடகரை பேரூராட்சி 1 முதல் 7 வார்டுகளுக்கு உட்பட்ட பொது மக்கள் தங்கள் கோரிக்கைகளை மனுக்களாக வழங்கி பயன் பெற்றனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# நேஷனல் பொறியியல் கல்லூரி முன்னாள் மாணவர் சந்திப்பு வரும் 2-ந் தேதி நடக்கிறது

**கோவில்பட்டி , ஜூலை 31**

நேஷனல் பொறியியல் கல்லூரியில், 1996 - 2000 ஆண்டுகளில் பயின்ற முன்னாள் மாணவர்களின் 25ஆம் ஆண்டு சந்திப்பு வரும் ஆகஸ்ட் 02, 2025 (சனிக்கிழமை) கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் அமெரிக்கா, சிங்கப்பூர், குவைத், இங்கிலாந்து உட்பட உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும், சென்னை, பெங்களூர், ஹைதராபாத், டெல்லி போன்ற பல்வேறு பெருநகரங்களில் இருந்தும் சுமார் 200-க்கும் மேற்பட்ட முன்னாள் மாணவர்கள் தங்கள் குடும்பங்களுடன் கலந்து கொள்கின்றனர்.இதில் நேரில் கலந்து கொள்ள முடியாத மாணாக்கர்கள் இணைய வழியாகவும் தங்களது நினைவுகளை பகிர்ந்து கொள்கின்றனர். இந்நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்களை கௌரவித்தல், தற்போதைய புதிய தொழில்நுட்பத்தை மாணவர்களுக்கு கற்றுக்கொடுத்தல் மற்றும் மரம் நடுதல் போன்ற முக்கிய நிகழ்வுகள் நடைபெற உள்ளது என்று கல்லூரி முதல்வர் முனைவர் கே.காளிதாச முருகவேல் தமது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## கோவில்பட்டி எஸ்.எஸ்.எஸ்.டி.எம்.கல்லூரியில்

# மண்டல அளவிலான வானவியல் மற்றும் விண்வெளி அறிவியல் இளைஞர் மாநாடு




**கோவில்பட்டி ஜூலை 31**

தமிழ்நாடு அஸ்ட்ரானமி சயின்ஸ் சொசைட்டி சார்பில் திருநெல்வேலி மண்டல அளவிலான வானவியல் மற்றும் வின்வெளி அறிவியல் இளைஞர் மாநாடு கோவில்பட்டி எஸ். எஸ் துரைச்சாமி நாடார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்தது.

தமிழ்நாடு அஸ்ட்ரானமி சயின்ஸ் சொசைட்டி சார்பில் தமிழகம் முழுவதும் 17 வயது முதல் 22 வயதிற்குட்பட்ட இளைஞர்களிடம் வானவியல் மற்றும் விண்வெளி அறிவியல் குறித்த ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் 10 மண்டலங்களாக பிரித்து ஒவ்வொரு மண்டலங்களிலும் ஆய்வுக் கட்டுரை,போஸ்டர்கள் தயாரிப்பு,குறும்படம் தயாரிப்பு, போட்டோகிராபி, அஸ்ட்ரோ விளையாட்டுகள் உருவாக்குதல் உள்ளிட்ட தலைப்புகளில் இளைஞர்களை ஈடுபட செய்து அதில் சிறந்த படைப்புகளை தேர்வு செய்து மாநில அளவிலான இளைஞர் மாநாட்டில் பங்கேற்க ஏற்பாடுகளை செய்து வருகிறது.

கோவில்பட்டி கல்லூரியில் நடந்த மண்டல அளவிலான மாநாட்டில் தூத்துக்குடி தென்காசி கன்னியாகுமரி திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள கல்லூரி மாணவர்கள் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

இதில் 66 மாணவர்கள் கொண்ட 33 குழுக்கள் பங்கேற்றதில் 50 மாணவர்கள் கொண்ட 25.குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு ஆகஸ்ட் 15,16,17 தேதிகளில் சிவகாசி காளீஸ்வரி கல்லூரியில் நடைபெறும் மாநில மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

கோவில்பட்டி கல்லூரியில் நடந்த நிகழ்ச்சிக்கு மாநில ஒருங்கிணைப்பாளர் உதயன் தலைமை வகித்தார்.

கல்லூரி செயலாளர் கண்ணன்,முதல்வர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மண்டல ஒருங்கிணைப்பாளர் முத்துசாமி அனைவரையும் வரவேற்றார்.

மண்டல அளவிலான வானவியல் மற்றும் விண்வெளி அறிவியல் இளைஞர் மாநாட்டினை நாடார் உறவின்முறை சங்க தலைவர் ஆர். எஸ் ரமேஷ் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்து பேசினார்.

ரோட்டரி மாவட்டம் 3212 ன் முன்னாள் ஆளுநர் முனைவர் ஷேக்சலீம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இளைஞர் மாநாட்டில் பங்கேற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசினை வழங்கி பேசினார்.

தூத்துக்குடி மாவட்ட அஸ்ட்ரோ கிளப் தலைவர் பேராசிரியர் ஜான்பிரின்ஸ், செயலாளர் முத்துமுருகன், அரசு மாதிரி பள்ளி கருத்தாளர்கள் ஜெகநாத்,ராஜ செல்வி,கல்லூரி பேராசிரியை பிரியங்கா,உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் அரசு மாதிரி பள்ளி கருத்தாளர் ரம்யா நன்றி கூறினார்.



தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்ற சாரல் விழா நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் ஸ்ரீராம் நாட்டிய ஷேத்ரா நாட்டிய பள்ளி மாணவிகள் பங்கேற்று நடனம் ஆடினர். சிறப்பாக நிகழ்ச்சி நடத்திய நாட்டிய பள்ளியை கௌரவிக்கும் வகையில் ஆசிரியர் புருஷோத்தமன், ஒருங்கிணைப்பாளர் சண்முகரமாதேவி மற்றும் மாணவிகளுக்கு சுற்றுலாத்துறை சார்பில் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

# தூத்துக்குடி அஞ்சலகத்தில் பாஸ்போர்ட் சேவை மையம்: பொதுமக்கள் பயன்பெற அழைப்பு

**திருச்செந்தூர்,ஜூலை.31-**

தூத்துக்குடி கோட்டத்தில் செயல்பட்டு வரும் அஞ்சலங்களில் பாஸ்போர்ட் சேவை மையத்தை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தூத்துக்குடி முதுநிலை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் (பொறுப்பு), வதக் ரவிராஜ் ஹரிஷ்சந்திரா வெளியிட்ட செய்திக்குறிப்பில், "தூத்துக்குடி கோட்டத்தில், அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையம் திருச்செந்தூர் ரோட்டில் அமைந்துள்ள தூத்துக்குடி அஞ்சல் ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

மதுரை/ திருநெல்வேலி-யில் உள்ள பாஸ்போர்ட் அலுவலகம் சென்று செய்து வந்த சான்றிதழ் சரி பார்ப்பு பணி தற்போது தூத்துக்குடி அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையத்திலும் செய்யப்படுகிறது.

புதியதாக பாஸ்போர்ட் விண்ணப்பித்தல் மற்றும் பாஸ்போர்ட் புதுப்பித்தல் போன்றவற்றிக்கு onlineலில் (பாஸ்போர்ட் சேவா இணையதளம்) விண்ணப்பித்து appoinment பெற வேண்டும். விண்ணப்பிக்கும் போதே சேவைக்குரிய கட்டணத்தை செலுத்தி விட வேண்டும். (Passport fee- Rs. 1500/-). விண்ணப்பித்த பின் எந்த தேதியில் சேவை மையத்தை அணுக வேண்டும் என்கிற விபரம் தெரிவிக்கப்படும். அந்த குறிப்பிட்ட தேதியில், உரிய ஆவணங்களுடன் அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையத்தை அணுகி தங்களுடைய சேவையைப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழக அரசின் சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சசர் பெ. கீதா ஜீவன் இந்த சேவையை தூத்துக்குடி அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையத்தில் பெற்றுக்கொண்டபோது, தூத்துக்குடி மக்கள் பாஸ்போர்ட் சேவையைப் பெறுவதற்கு வேறு ஊர்களுக்கு செல்லாமல் தூத்துக்குடியிலேயே இந்த சேவையை உபயோகித்து பயனடையுமாறு கேட்டுக் கொண்டார். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

